**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**S.T.C.No.1987/2025**
**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | S.மகேஸ்வரன் | **Caste** | : | |
| **Father's Name** | : | சுப்புராயன் | **Calling** | : | சிறப்பு சார்பு ஆய்வாளர், நகர் தெற்கு காவல் நிலையம். |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | 52 |
| | | | **Dated** | : | **06.07.2026** |

**06.07.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 **திரு.S.மகேஸ்வரன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது, நகர் தெற்கு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக அயல் பணியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2024ம் தேதி 15.00 மணிக்கு திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராகிய நான் மற்றும் போலீஸ் பார்ட்டிகளாகிய சிறப்பு சார்பு ஆய்வாளர் இளங்கோ மற்றும் தலைமைக்காவர் 1315 அன்வர் சாதிக் ஆகியோர்களுடன் நிலைய சரக பகுதிகளில் குற்ற தடுப்பு சம்மந்தமாகவும், மது விளக்கு சம்மந்தமாகவும், ரொந்து சென்று காண்காணித்துக்கொண்டும், திண்டுக்கல் AMC Road,ஆனந்த பெறிக்கடை அருகே சென்றபோது பின்னர் பெயர் விலாசம் தெரிந்த வீரக்காளிமுத்து,

வயது 29, S/o.முருகன், பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல் என்பவர் வெள்ளை நிற சாக்குப்பையுடன் நின்றுக்கொண்டிருந்தவர் எங்கள் போலீஸ் பார்ட்டியை பார்த்தவுடன் ஓட எத்தனித்தவரை, வழைத்துப்பிடித்து விசாரித்தபோது அரசு அனுமதி இன்றி அரசு மதுபான பாட்டில்களை தனது சுய லாபம் கருதி பொது இடத்தில் சில்லரை விற்பனை செய்வதற்காக 180ml அளவுக்கொண்ட Goldenchoice பிராண்டி 11 பாட்டில்களை வைத்திருந்தவரை காரணம் கூறி கைது செய்து மேற்படி மதுபான பாட்டில்களை அத்தாச்சியில் கைப்பற்றி அந்த இடத்தில் போலீசார் தவறி வேறு தனிநபர்கள் யாரும் வர இயலாததால் 15.15 மணிக்கு மேற்படி போலீஸ் சாட்சியின் முன்னிலையில், மதுபான பாட்டில்களை அத்தாச்சியில் கைப்பற்றி எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.1037/2024 U/s.4(1)(c) TNP Act ல் வழக்கு பதிவு செய்து, எதிரியை திரேக பரிசோதனை செய்து முதல் தகவல் அறிக்கையில் அசல் நகலினை கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிக்ளுக்கு அனுப்பி வைத்து, விசாரணைக்காக நகல் ஒன்றினை S.I.ராமப்பாண்டியன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

__எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை__

இவ்வழக்கில் சம்பவ சாட்சி மற்றும் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தது நான் தான் என்றால், சரிதான். நான் தான் முதல் முதலாக எதிரியை விசாரணை செய்த விசாரணை அதிகாரி நான் தான் என்றால், சரிதான். எதிரியை ஒப்புதல் வாக்குமூலம் தரவில்லை என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கியில் குறிப்பிட்டுள்ள வெள்ளை நிற சாக்குப்பையை கைப்பற்றவில்லை என்றால், சரிதான். சம்பவமான போருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள மக்கள் நடமாற்றம் அதிகம் உள்ள, போக்கு வரத்து மிகுந்த பகுதி என்றால், சரிதான். அத்தாச்சி தனி நபர் சாட்சிகள் முன்னிலையில் பெறப்படவில்லை என்றால், சரிதான். சம்பவம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைப்படம் நான் தயார் செய்யவில்லை என்றால், சரிதான். 02.10.2024ம் தேதி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 07.10.2024ம் தேதி தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால், சரிதான். கைப்பற்றியதாக சொல்லப்படும் 11 பாட்டில்களும் டாஸ்மார்க் கடையின் Sticker ஒட்டப்பட்டது என்றால், சரிதான். அவர் எந்த கடையில் வாங்கினார் என்ற விபரங்களை விசாரித்து சாட்சி எதுவும் பெறவில்லை என்றால், சரிதான். எதிரி நான் சொல்வது போல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் மது விற்றார் என்று சொல்வது பொய் என்றால், சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரியிடம் இருந்து அத்தாச்சி மூலமாக எந்தவித மது பாட்டிலும்

கைப்பற்றப்படவில்லை என்றால், சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால், சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, நீதிமன்றத்தில் பொய் சாட்சிய் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.07.06 21:19:21 +0530

Judicial Magistrate No.II
Dindigul.